**ஜூலை – 31**

# TNPSC துளிகள்

- கோசி - மேச்சி மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் இணைப்புத் திட்டத்தை 2029 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், இதற்காக மத்திய அரசு ₹3,652.56 கோடி நிதி உதவியை அங்கீகரித்துள்ளது.
    - பீகாரில் உள்ள கோசி மற்றும் மேச்சி நதி அமைப்புகளை இணைப்பதன் மூலம் நீர்ப்பாசன வசதியை மேம்படுத்துவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சீனா தனது "செயற்கை சூரியன்" அணுக்கரு இணைவுத் திட்டத்திற்காக உலகின் மிகப்பெரிய 582 டன் எடை கொண்ட மீக்கடத்து காந்தத்தை வெற்றிகரமாக உருவாக்கி முடித்துள்ளது.
    - இந்த காந்தமானது பர்னிங் பிளாஸ்மா எக்ஸ்பெரிமென்டல் சூப்பர்கண்டக்டிங் டோகாமாக் (BEST) உலையில் 100 மில்லியன் டிகிரி செல்சியஸுக்கும் அதிகமாக வெப்பப்படுத்தப்பட்ட பிளாஸ்மாவை கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும்.
- மேற்கு வங்கத்தின் கொல்கத்தா துறைமுகத்தில் இருந்து நேபாளத்தின் பிராட்நகர் சுங்க முனையத்திற்கு முதன்முறையாக நேரடி வணிகக் கொள்கலன் சரக்கு ரயிலை இந்திய ரயில்வே இயக்கியது.
- 2026 ஆம் ஆண்டிற்கான அகர்தலாவின் கர்ச்சி பூஜையானது பூமித்தாயின் மாத விடாயைக் குறிப்பதாக நம்பப்படும் ஆமா பேச்சி (அம்பு பாச்சி) காலத்திற்குப் பிறகு அனுசரிக்கப்படுகிறது.
    - இவ்விழா பூமித்தாயின் சடங்கு ரீதியான தூய்மைப்படுத்துதலைக் குறிக்கிறது என்பதோடு இக்காலத்தில் உழுதல், தோண்டுதல் மற்றும் சில மங்களகரமான செயல்கள் தவிர்க்கப் படுகின்றன.
- 2027 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் (Q1), வைப்புத்தொகையை விட கடன்கள் வேகமாக வளர்ந்ததால், இந்திய வங்கிகளின் கடன்-வைப்பு (CD) விகிதம் 62 ஆண்டுகளில் இல்லாத உச்சபட்சமாக 82.6% ஆக இருந்தது என இந்தியப் பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மையத்தின் (CMIE) தரவுகளின்படி கண்டறியப் பட்டுள்ளது.
    - கடந்த ஐந்து ஆண்டுகளில், வங்கிகள் தங்கள் இருப்புநிலைக் குறிப்பில் அதிகப் படியான முதலீடுகளைக் கொண்டிருந்தன என்ற நிலையில் அவற்றை அவை கடன்களாக மாற்றியுள்ளன.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## இந்து மகள்களுக்கான சொத்துரிமை


- 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 ஆம் தேதிக்கு முன் இறந்த இந்து மகள்களுக்கு பூர்வீகச் சொத்தில் சமமான பங்காளர் உரிமை கிடையாது என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- இந்து வாரிசுரிமை (திருத்தம்) சட்டம், 2005 நடைமுறைக்கு வந்த தேதியான 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 அன்று இந்து மகள்கள் உயிருடன் இருந்திருந்தால் மட்டுமே அவர்களுக்கு சமமான சொத்துரிமை கிடைக்கும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.
- 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 ஆம் தேதிக்கு முன் இறந்த மகளின் சட்டபூர்வமான வாரிசுகள் அச்சொத்துரிமையைக் கோர முடியாது; ஏனெனில் இறந்த மகள் அந்த

உரிமையைப் பெற்றிருக்கவில்லை.


❖ மகளின் பிறந்த தேதி முக்கியமல்ல என்றும், திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட தேதியில் அவர் உயிருடன் இருந்தாரா என்பது மட்டுமே முக்கியம் என்றும் நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

❖ 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 அன்று உயிருடன் இருந்த மகள்களுக்கு பூர்வீகச் சொத்தில் மகன்களுக்கு இணையான உரிமைகள் உண்டு.

❖ குடும்ப சொத்துப் பிரச்சினை தொடர்பான வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியது.


The Madras High Court has ruled that Hindu daughters who died before September 9, 2005, are not entitled to an equal share in ancestral property under the amended Hindu Succession Act. The court observed that the 2005 amendment, which granted daughters equal rights as sons in ancestral property, came into effect on September 9, 2005. The ruling clarifies that daughters who were not alive when the amendment came into force cannot claim coparcenary rights under the amended law.

## மாநிலங்களுக்கு இடையேயான நெய்யாறு நதிநீர் விவகாரம்




❖ நெய்யாறு நதிநீர் தொடர்பாக தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களுக்கு இடையே நீண்டகாலமாக நிலுவையில் உள்ள சட்டரீதியான பிரச்சினை உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்து விசாரணையில் உள்ளதால் இது முக்கியத்துவம் பெறுகிறது.

❖ நெய்யாறு பாசனத் திட்டம் 1951 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு எவ்வித முறையான எழுத்துப்பூர்வ ஒப்பந்தமும் இல்லாமல் 1958 ஆம் ஆண்டு முதல் நெய்யாறு இடதுகரை கால்வாய் மூலம் தமிழ்நாடு பாசன நீரைப் பெறத் தொடங்கியது.

❖ இத்திட்டம் தமிழ்நாட்டின் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சுமார் 9,000 ஏக்கர் உட்பட 36,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும் வகையில் வடிவமைக்கப் பட்டது.


❖ பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில், கேரளா சுமார் 40 ஆண்டுகளாக

தமிழ்நாட்டிற்கு 150 கன அடி நீரை வழங்கி வந்தது.

- ❖ 2004 ஆம் ஆண்டில், கேரளா நெய்யாறு நதிநீர் வழங்குவதை நிறுத்தியது என்பதால் அது நதிநீர் பகிர்வு மற்றும் நெய்யாறு மாநிலங்களுக்கு இடையேயான நதியா என்பது குறித்த பிரச்சினைக்கு வழி வகுத்தது.
- ❖ இது தொடர்பாக தமிழ்நாடு 2012 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்தை அணுகியதுடன் இந்த வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது மற்றும் இதற்கான வாதங்கள் இன்னும் தொடங்கப்படவில்லை.

# தேசியச் செய்திகள்

## 2030 ஆம் ஆண்டிற்குள் ஹெபடைடிஸ் நோயை ஒழிப்பதற்கான இந்தியாவின் முயற்சிகள்





- ❖ தேசிய வைரல் ஹெபடைடிஸ்/வைரஸால் ஏற்படும் கல்லீரல் அழற்சி கட்டுப்பாட்டுத் திட்டத்தின் (NVHCP) கீழ் 2030 ஆம் ஆண்டிற்குள் வைரல் ஹெபடைடிஸை பொது சுகாதார அச்சுறுத்தலிலிருந்து அகற்றுவதற்கான முயற்சிகளை இந்தியா வலுப்படுத்தி வருகிறது.
- ❖ ஹெபடைடிஸ் என்பது வைரஸ் தொற்றுகள், நச்சுப் பொருட்கள் மற்றும் தன்னுடல் தாக்க நோய்களால் ஏற்படும் ஒரு கல்லீரல் அழற்சியாகும்.
- ❖ ஹெபடைடிஸ் A, B, C, D and E ஆகியன ஐந்து முக்கிய ஹெபடைடிஸ் வைரஸ் வகைகளாகும் என்பதுடன் இதில் ஹெபடைடிஸ் B மற்றும் C கடுமையான நாள்பட்ட கல்லீரல் நோய்களை ஏற்படுத்துகின்றன.
- ❖ ஹெபடைடிஸ் B மற்றும் C நோய்களுக்கு சிகிச்சையளிக்கப் படாவிட்டால், அவை கல்லீரல் சுருக்கம் மற்றும் முதன்மை கல்லீரல் புற்றுநோய்க்கு வழி வகுக்கும்.
- ❖ தேசிய வைரல் ஹெபடைடிஸ்/வைரஸால் ஏற்படும் கல்லீரல் அழற்சி கட்டுப்பாட்டுத் திட்டம் ஆனது இந்தியா முழுவதும் ஹெபடைடிஸ் B மற்றும் C நோய்களுக்கான இலவச

பரிசோதனை, நோயறிதல் மற்றும் வைரஸ் தடுப்பு சிகிச்சையை வழங்குகிறது.

- இத்திட்டத்தின் கீழ் மலிவான விலையில் ஜெனரிக்/பொதுப் பெயர் மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்கப்படுவதுடன், மாவட்ட மருத்துவமனைகள் முதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் வரை இச்சேவைகள் விரிவுபடுத்தப்படுகின்றன.
- இந்தியாவின் ஹெபடைடிஸ் ஒழிப்பு உத்தியானது 2030 ஆம் ஆண்டிற்குள் தொற்று நோய்களை முடிவுக்குக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்கு 3 (SDG 3.3) உடன் ஒத்துப் போகிறது.

## இந்தியாவில் அதிக வருமானம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

- ₹100 கோடி அல்லது அதற்கும் மேல் வருமானம் ஈட்டுபவர்களின் எண்ணிக்கை 2021-22 ஆம் மதிப்பீட்டு ஆண்டில் 142 ஆக இருந்த நிலையில், 2025-26 ஆம் மதிப்பீட்டு ஆண்டில் 576 ஆக அதிகரித்துள்ளது.
- இந்தியாவில் கோடீஸ்வரர்களுக்கான அதிகாரப்பூர்வ வருமான அடிப்படையிலான வரையறை இல்லாததால், வருமான வரிக் கணக்கு தாக்கல் (ITRs) தரவுகளின் அடிப்படையில் இது கணக்கிடப்பட்டுள்ளது.
- 2025-26 ஆம் மதிப்பீட்டு ஆண்டு என்பது 2024-25 ஆம் நிதியாண்டில் (2024 ஆம் ஆண்டு ஏப்ரல் - 2025 ஆம் ஆண்டு மார்ச்) ஈட்டப்பட்ட வருமானத்தைக் குறிக்கிறது.
- வருமானம் தொடர்பான தரவுகளைச் சேகரிப்பதற்காக, புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) இந்தியாவின் முதல் தேசிய குடும்ப வருமானக் கணக்கெடுப்பை நடத்தி வருகிறது.
- குடும்ப நுகர்வுச் செலவினக் கணக்கெடுப்பின் (2023-24) படி, சமத்துவமின்மையின் அளவீடான ஜினி குறியீடு கிராமப்புறங்களில் 0.237 ஆகவும், நகர்ப்புறங்களில் 0.284 ஆகவும் உள்ளது.




## இந்தியாவின் கடல்சார் பணியாளர்களின் வளர்ச்சி

- BIMCO-ICS (பால்டிக் மற்றும் சர்வதேச கடல்சார் சபை - சர்வதேச கப்பல் போக்குவரத்துச் சபை) கடலோடி பணியாளர் அறிக்கை 2026 இன் படி, உலகளவில்

மாலுமிகளை அதிகளவில் வழங்கும் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.

- சுமார் 3.11 லட்சம் கடல்சார் தொழில் வல்லுநர்களுடன், உலகளாவிய கடல்சார் பணியாளர்களில் சுமார் 12.16% பங்களிப்பை வழங்கி பிலிப்பைன்ஸுக்கு அடுத்த படியாக இந்தியா தரவரிசையில் உள்ளது.
- சர்வதேச வர்த்தகக் கப்பற்படைகளில் பணியாற்றும் இந்திய மாலுமிகள், உலகளாவிய கப்பல் போக்குவரத்து, வர்த்தகம் மற்றும் தளவாடப் பணிகளுக்கு ஆதரவளிக்கின்றனர்.
- உலகளாவிய கடல்சார் பணியாளர்களில் இந்தியாவின் பங்கு 2015 ஆம் ஆண்டில் 5.2% ஆக இருந்து 2026 ஆம் ஆண்டில் 12% ஆக அதிகரித்துள்ளது; இது கடல்சார் வேலை வாய்ப்பின் வளர்ச்சியைக் காட்டுகிறது.
- துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் கப்பல் போக்குவரத்து தலைமை இயக்குநரகம் (DGS) இந்திய மாலுமிகளின் பயிற்சி, சான்றிதழ் மற்றும் நலன்களை ஒழுங்குபடுத்துகிறது.




## இந்தியாவில் பாலிமர் ரூபாய் நோட்டுகள்

- இந்திய ரிசர்வ் வங்கி, ₹10 மற்றும் ₹20 மதிப்புள்ள நோட்டுகளுக்கான ஒரு சோதனைத் திட்டத்துடன் தொடங்கி, பாலிமர் (நெகிழி) ரூபாய் நோட்டுகளை அறிமுகப்படுத்தும் திட்டங்களை மீண்டும் செயல்படுத்தி வருகிறது.
- ரிசர்வ் வங்கியானது இதற்கு முன்னர் ஐந்து நகரங்களில் (சென்னை, கொச்சி, மைசூர், ஜெய்ப்பூர் மற்றும் சிம்லா) ஒரு பில்லியன் ₹10 பாலிமர் நோட்டுகளைச் சோதனை செய்தது.
- ரிசர்வ் வங்கியின் முழு உரிமையுடைய துணை நிறுவனமான பாரதிய ரிசர்வ் வங்கி நோட் முத்ரன் பிரைவேட் லிமிடெட் (BRBNMPL), இரு அச்சில் நோக்குநிலை கொண்ட பாலிபுரோப்பிலீன் (BOPP) அடிப்படையிலான பாலிமர் மூலப்பொருளை வழங்குவதற்காக உலகளாவிய ஆர்வ வெளிப்பாட்டை (EOI) வெளியிட்டது.

- பாரம்பரிய இந்திய நாணயம் 100% பருத்திக் கூழ் காகிதத்தால் ஆனது.
- ஆஸ்திரேலியா 1988-ஆம் ஆண்டில் முழுமையான பாலிமர் ரூபாய் நோட்டுத் தொடரை முதன்முதலில் அறிமுகப்படுத்தியது.
- பாலிமர் ரூபாய் நோட்டுகள் அதிக நீடித்து உழைக்கக்கூடியவை, நீர் புகாதவை, கிழியாதவை, மேலும் ஒளிபுகும் சாளரங்கள் மற்றும் உட்பொதிக்கப்பட்ட பாதுகாப்பு கூறுகள் போன்ற மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் காரணமாக இதில் கள்ளநோட்டு தயாரிப்பது கடினம்.
- குறைந்த மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளைப் பொறுத்தவரை, உற்பத்திச் செலவு மட்டுமே அதன் மதிப்பில் 20–24% ஆக இருந்தது என்று பல நாடுகள் கண்டறிந்துள்ளன.
- இருப்பினும், நெகிழி நாணயங்களின் ஆதரவாளர்கள், குறைந்த மாற்று அதிர்வெண் மூலம் அதிக உற்பத்திச் செலவை நியாயப்படுத்த முடியும் என்று கூறுகின்றனர்.
- இந்திய அரசியலமைப்புச் சட்டம், நாணயம், நாணயச் சட்டம், சட்டப்பூர்வப் பணம் மற்றும் அந்நியச் செலாவணி ஆகியவற்றை ஒன்றியப் பட்டியலின் மூலம் ஒன்றிய அரசின் பிரத்தியேக சட்டமியற்றும் அதிகார வரம்பிற்குள் வைக்கிறது.
- 1934 ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதற்கும் நிர்வகிப்பதற்கும் சட்டக் கட்டமைப்பை வழங்குகிறது.
- தூய்மையான, நல்ல தரமான ரூபாய் நோட்டுகள் மற்றும் நாணயங்கள் புழக்கத்தில் இருப்பதை உறுதி செய்வதற்காகவும், அழுக்கடைந்த மற்றும் சேதமடைந்த நோட்டுகளைப் புழக்கத்திலிருந்து திரும்பப் பெறுவதற்காகவும், இந்திய ரிசர்வ் வங்கி 1999 ஆம் ஆண்டில் தூய்மையான நோட்டுக் கொள்கையை அறிவித்தது.
- 2011 ஆம் ஆண்டின் நாணயச் சட்டம், இந்திய அரசால் வெளியிடப்படும் நாணயங்களின் வடிவமைப்பு, உற்பத்தி மற்றும் புழக்கத்தை நிர்வகிக்கிறது.
- ஒரு ரூபாய் நோட்டை வெளியிடுவதற்கு இந்திய அரசு பொறுப்பாகும்.




## "கோல்டன் ஸ்பைஸ்" திட்டம்


- மத்திய அமைச்சர் ஜோதிராதித்ய எம். சிந்தியா, மேகாலயாவின் லக்காடாங் மஞ்சளுக்கான "கோல்டன் ஸ்பைஸ்" திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- புவிசார் குறியீடு (GI) சான்றளிக்கப்பட்ட லக்காடாங் மஞ்சளின் மதிப்புச் சங்கிலியை மேம்படுத்துவதையும், மேகாலயாவை ஒரு உலகளாவிய மசாலா மையமாக நிலை நிறுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அதிக குர்குமின் கொண்ட இயற்கை மஞ்சளுக்கான உலகின் முதன்மையான

மூலமாக மேகாலயா உருவெடுக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

- இது அதன் அதிக குர்குமின் உள்ளடக்கத்திற்காக அறியப்படுகிறது.
- இதன் குர்குமின் அளவு 7% முதல் 12% வரை உள்ளது, அதேசமயம் மஞ்சளுக்கான உலகளாவிய சராசரி சுமார் 2% முதல் 4% வரை உள்ளது.
- குர்குமின் என்பது மஞ்சளில் உள்ள முதன்மையான உயிரியல் செயல்பாட்டுக் கலவை ஆகும் என்பதோடு இது தர மதிப்பீட்டிற்கான ஒரு குறியீடாகப் பயன்படுத்தப்படுகிறது.




## உற்பத்தி அலகுகளுடன் கூடிய PLI-தானியங்கித் திட்டம்




- 66 உற்பத்தி அலகுகளுடன் மகாராஷ்டிரா மாநிலம் PLI-ஆட்டோ திட்டத்தில் முதலிடம் வகிக்கிறது.
- அதனைத் தொடர்ந்து, ஹரியானா 35 உற்பத்தி அலகுகளுடனும், கர்நாடகா 28 உற்பத்தி அலகுகளுடனும் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.
- அதே சமயம், நாட்டின் முக்கிய வாகன உற்பத்தி மையங்களில் ஒன்றான தமிழ்நாடு, இத்திட்டத்தின் கீழ் 38 அலகுகளைக் கொண்டுள்ளது.

- இந்தத் தரவுகள் கனரகத் தொழில்கள் அமைச்சகத்தால் சமர்ப்பிக்கப்பட்டவை.
- PLI-தானியங்கித் திட்டமானது, மேம்பட்ட வாகனப் பொருட்கள் (AAT) துறையில் இந்தியாவின் உற்பத்தித் திறனை வலுப்படுத்துவதையும், மேம்பட்ட வாகனத் தொழில்நுட்பங்கள் மற்றும் உதிரிபாகங்களின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டமானது முதலீடுகளை ஈர்ப்பது, உற்பத்தியை அதிகரிப்பது, வேலைவாய்ப்பை உருவாக்குவது மற்றும் மேம்பட்ட வாகனப் பொருட்கள் மற்றும் உதிரிபாகங்களின் உள்ளூர்மயமாக்கலை அதிகரிப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது, இதன் மூலம் இந்தியாவின் உள்நாட்டு வாகனம் மற்றும் உதிரிபாகச் சூழல் அமைப்பை வலுப்படுத்துகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## அமெரிக்க-சவுதி அணுசக்தி ஒப்பந்தம் 2026




- அமெரிக்காவும் சவுதி அரேபியாவும் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன; இதன் மூலம் அந்த வளைகுடா நாடு சிவில் அணுசக்தித் திட்டத்தை உருவாக்கிக்கொள்ள வழிவகுக்கும் என்று கூறப்படுகிறது.
- இறக்குமதி செய்யப்படும் எரிபொருளைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக, அமெரிக்காவால் கட்டப்பட்ட செறிவூட்டும் நிலையத்தில் எரிபொருளை உற்பத்தி செய்வதற்காக, சவுதி அரேபியா தனது மண்ணிலேயே யுரேனியத்தைச் செறிவூட்ட அனுமதிக்கப்படலாம்.
- 123 ஒப்பந்தம் (அமெரிக்காவின் 1954 ஆம் ஆண்டு அணுசக்திச் சட்டம்) என்பது அமெரிக்காவிற்கும் மற்றொரு நாட்டிற்கும் இடையிலான அமைதியான அணுசக்தி ஒத்துழைப்பிற்கான ஒரு சட்டக் கட்டமைப்பாகும்.

## ஆயுதமற்ற மற்றும் ஆயுதங்களைக் களைவதற்கான அமைதிக்கான ரோம் பிரகடனம்

- நோபல் பரிசு பெற்றவர்கள், செயற்கை நுண்ணறிவு அறிவியலாளர்கள், மதத் தலைவர்கள் மற்றும் பிற முக்கிய பிரமுகர்கள் அடங்கிய ஒரு குழு, 'ஆயுதமற்ற மற்றும்

ஆயுதங்களைக் களைவதற்கான அமைதிக்கான ரோம் பிரகடனம்' என்று அழைக்கப்படும் பிரகடனத்தில் கையெழுத்திட்டது.

- அணு ஆயுத ஏவுகணைகளை அணுகுவதிலிருந்து தன்னாட்சி அமைப்புகளைத் தடைசெய்ய ஒரு சர்வதேச ஒப்பந்தத்திற்கு இந்தப் பிரகடனம் அழைப்பு விடுக்கிறது, அதே நேரத்தில் இந்த அச்சுறுத்தல் அவ்வளவு கற்பனையானது அல்ல என்பதையும் வலியுறுத்துகிறது.
- இது போப் லியோ XIV-இன் 'மக்னிஃபிகா ஹுமானிடாஸ்' (Magnifica Humanitas) என்ற பிரகடனத்தால் ஈர்க்கப்பட்டது.
- கட்டுப்பாடற்ற செயற்கை நுண்ணறிவிலிருந்து மனித கண்ணியத்தைப் பாதுகாக்க இந்தப் பிரகடனம் அழைப்பு விடுக்கிறது.
- செயற்கை நுண்ணறிவால் கட்டுப்படுத்தப்படும் அணு அமைப்புகள் இருப்புக்கே அச்சுறுத்தலாக உள்ளன என்று இது எச்சரிக்கிறது என்பதோடு பொறிமுறைகளுக்கு அறநெறி, பச்சாதாபம் மற்றும் பகுத்தறிவு இல்லை என்றும், அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் மனிதர்களின் முடிவெடுக்கும் திறனுக்கு அவை ஒருபோதும் மாற்றாக இருக்கக்கூடாது என்றும் இது வாதிடுகிறது.
- பிரகடனத்தின் கோட்பாடுகள்
    - அடுத்த ஆயுதப் போட்டியை ஆயுதமற்றதாக்குதல்,
    - பொறுப்பான வளர்ச்சி,
    - செயற்கை நுண்ணறிவின் பொறுப்பான பயன்பாடு,
    - பொறுப்பான ஆளுகை,
    - பொறுப்பான தலைமைத்துவம், மற்றும்
    - அணு ஆயுதக் குறைப்பு.




## உலகளாவிய சாலை மரணங்கள் மீதான தரவுகள்

- உலகச் சாலைகளில் ஒரு பில்லியனுக்கும் அதிகமான வாகனங்கள் சேர்க்கப்பட்ட போதிலும், 2011 மற்றும் 2025-ஆம் ஆண்டுக்கு இடையில் உலகளவில் சாலைப் போக்குவரத்து மரணங்கள் 21 சதவீதம் குறைந்துள்ளன.
- இது உலக சுகாதார அமைப்பு (WHO) வெளியிட்ட புதிய தரவுகளின்படி தெரிய வந்து உள்ளது.
- இருப்பினும், இந்தியாவை உள்ளடக்கிய WHO தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில்

சாலை மரணங்களில் 2 சதவீதக் குறைவு மட்டுமே பதிவாகியுள்ளது.

- இந்தப் பிராந்தியத்தில் வங்கதேசம், பூடான், வட கொரியா, இந்தோனேசியா, மாலத் தீவுகள், மியான்மர், நேபாளம், இலங்கை, தாய்லாந்து மற்றும் திமோர்-லெஸ்டே ஆகிய நாடுகளும் அடங்கும்.
- WHO ஐரோப்பியப் பிராந்தியம் மிகப்பெரிய சரிவைப் பதிவு செய்துள்ளது.
- சாலைப் பாதுகாப்பு குறித்த புதிய பொதுச் சபை பிரகடனத்தை ஐக்கிய நாடுகள் சபையின் (UN) உறுப்பு நாடுகள் ஏற்றுக் கொண்ட நிலையில், உலக சுகாதார அமைப்பின் (WHO) சமீபத்திய புள்ளிவிவரங்கள் வெளியிடப்பட்டன.
- 2021 ஆம் ஆண்டு நிலைகளுடன் ஒப்பிடுகையில், 2030 ஆம் ஆண்டிற்குள் சாலை விபத்து மரணங்களையும் கடுமையான காயங்களையும் 50 சதவீதம் குறைக்கும் நிலையான வளர்ச்சி இலக்கை அடைவதற்கான முயற்சிகளை விரைவுபடுத்துவதை இந்தப் பிரகடனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் பிரகடனத்தின் ஒரு முக்கியத் தூணான "பாதுகாப்பான அமைப்பு" அணுகுமுறையானது, மனிதத் தவறுகள் தவிர்க்க முடியாதவை என்பதை அங்கீகரித்து, அதன்மூலம் உயிரிழப்பு விபத்துகளின் அபாயத்தைக் குறைப்பதற்காகப் பாதுகாப்பான சாலை வடிவமைப்பு, மேம்பட்ட வாகனங்கள், குறைந்த வேகம் மற்றும் வலுவான ஒழுங்குமுறைகளை வலியுறுத்துகிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## அண்ட்ரோமெடா விண்மீன் திரளில் குறைந்து வரும் நட்சத்திர உருவாக்கம்

- நாசாவின் ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியின் தரவுகளைப் பயன்படுத்திய ஒரு புதிய ஆய்வின்படி, அண்ட்ரோமெடா விண்மீன் திரளில் கடந்த 500 மில்லியன் ஆண்டுகளாக நட்சத்திர உருவாக்கம் குறைந்து வருவது கண்டறியப்பட்டுள்ளது.
- அண்ட்ரோமெடா விண்மீன் திரள் (M31) என்பது பூமியில் இருந்து சுமார் 2.5 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ள ஒரு பெரிய சுருள் விண்மீன் திரளாகும்.

- இது பால்வீதி விண்மீன் திரளுக்கு மிக அருகில் உள்ள ஒரு பெரிய விண்மீன் திரளான இதனை சாதகமான சூழ்நிலைகளில் வெறும் கண்ணால் காண முடியும்.
- இது அண்ட்ரோமெடா விண்மீன் தொகுப்பில் அமைந்துள்ளது மற்றும் பால்வீதிக்கு இணையான அளவைக் கொண்டுள்ளது.
- இது ஒரு கோடிட்ட சுருள் விண்மீன் திரளாகும்; இதன் மையப்பகுதியில் நட்சத்திரங்களாலான ஒரு பட்டை போன்ற அமைப்பு காணப்படுகிறது.
- இந்த விண்மீன் திரள் வினாடிக்கு 110 கி.மீ வேகத்தில் பால்வீதியை நோக்கி நகர்கிறது மற்றும் தொலைதூர எதிர்காலத்தில் அதனுடன் ஒன்றிணையக் கூடும்.





## சுற்றுச்சூழல் செய்திகள்

### ஆந்திரப் பிரதேசத்தில் சதுப்பு நிலக்காடுகள் மறுசீரமைப்பு

- மிஷ்டி (MISHTI) திட்டத்தின் கீழ் சதுப்பு நிலக்காடுகளை மீட்டெடுப்பதில் இந்திய மாநிலங்களில் ஆந்திரப் பிரதேசம் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.
- 2025-26 ஆம் ஆண்டில் ₹18.04 கோடி முதலீட்டில் 2,047.70 ஹெக்டேர் அளவிலான சதுப்பு நிலக்காடுகளை மாநில அரசு மீட்டுள்ளது.
- கடலோர சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் பல்லுயிர்த் தன்மையை வலுப்படுத்த, ஆந்திரப் பிரதேசத்தின் பெரிய பசுமைச் சுவர் முன்னெடுப்பின் கீழ் சதுப்பு நிலக்காடுகளின் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ஓத நீரின் ஓட்டத்தை மேம்படுத்தவும், சதுப்பு நிலக்காட்டின் மரங்களின் உயிர் வாழ்வை அதிகரிக்கவும் மற்றும் சுற்றுச்சூழல் மீள்திறனை மேம்படுத்தவும் வனத் துறை மீன் எலும்புத் தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.
- 2026-27 ஆம் ஆண்டிற்கு, மாநிலம் முழுவதும் 1,618 ஹெக்டேர் சதுப்பு நிலக்காடுச்

சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுக்க ஆந்திரப் பிரதேசம் இலக்கு நிர்ணயித்து உள்ளது.

- மிஷ்டி திட்டமானது சதுப்பு நிலக்காடுகளை வளர்த்தல், கடலோர சுற்றுச்சூழல் அமைப்பை மீட்டெடுத்தல், பருவநிலையைத் தாங்கும் திறன் மற்றும் கடலோரப் பகுதிகளில் நிலையான வாழ்வாதாரத்தை மேம்படுத்துகிறது.





## முக்கிய தினங்கள்

### சதுப்பு நிலக்காடுகளின் சுற்றுச்சூழல் அமைப்பின் பாதுகாப்பிற்கான சர்வதேச தினம் 2026 - ஜூலை 26

- சதுப்பு நிலக்காடுகளைப் பாதுகாத்தல் மற்றும் அதன் நிலையான மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மாங்குரோவ் காடுகளின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக-பொருளாதார முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் இத்தினம் 2015 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- இந்திய வன நிலை அறிக்கை (ISFR) 2023 இன் படி, இந்தியாவில் 4,992 சதுர கிலோமீட்டர் சதுப்பு நிலக்காடுகள் உள்ளன என்ற நிலையில் இதில் மேற்கு வங்கம் மிகப்பெரிய பங்கைக் கொண்டுள்ளது.
- உப்பைத் தாங்கி வளரக்கூடிய கடலோரக் காடுகளான சதுப்பு நிலக்காடுகள் இவை கடற்கரைகளைப் பாதுகாக்கவும், கார்பனைச் சேமிக்கவும் மற்றும் கடல் பல்லுயிர்ப் பெருக்கத்தை ஆதரிக்கவும் உதவுகின்றன.

- தமிழ்நாடு வனத்துறையானது சதுப்பு நிலக்காடுகளின் பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் அதனை மீட்டெடுப்பதற்கான மீன் எலும்பு கால்வாய் தொழில்நுட்பம் ஆகியவற்றை வலியுறுத்தும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டது.




# இதரச் செய்திகள்

## யுனெஸ்கோவின் ஆபத்தான நிலையில் உள்ள உலகப் பாரம்பரிய சின்னங்களின் பட்டியல் 2026




- தென்கொரியாவின் பூசானில் நடைபெற்ற 48வது உலகப் பாரம்பரியக் குழுக் கூட்டத்தின் போது, யுனெஸ்கோ ஆறு இடங்களை ஆபத்தான நிலையில் உள்ள உலகப் பாரம்பரியச் சின்னங்களின் பட்டியலில் சேர்த்துள்ளது.

- ஆபத்தான பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்ட மூன்று உலகப் பாரம்பரிய இடங்கள் போமா-படிங்கிலோ வலசைப்போகும் நிலப்பரப்பு (தெற்கு சூடான்), மவுண்ட் அமேல் கோட்டைகள் (லெபனான்) மற்றும் செபாஸ்டியா (பாலஸ்தீன அரசு) ஆகும்.
- ஆபத்தான பட்டியலில் சேர்க்கப்பட்ட ஏற்கனவே உள்ள மூன்று உலகப் பாரம்பரிய இடங்கள் பழங்கால நகரமான டாரிக் செர்சோனீஸ் மற்றும் அதன் சோரா (உக்ரைன்), வரலாற்றுச் சிறப்புமிக்க உள் நகரமான பரமரிபோ (சுரினாம்) மற்றும் டயர் (லெபனான்) ஆகியனவாகும்.
- தீவிரமான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் இடங்களைப் பாதுகாப்பதற்காக, ஆபத்தான நிலையில் உள்ள உலகப் பாரம்பரியச் சின்னங்களின் பட்டியல் உலகப் பாரம்பரிய மாநாட்டின் (1972) கீழ் உருவாக்கப்பட்டது.
- ஆயுத மோதல்கள், பருவநிலை மாற்றம், வேட்டையாடுதல், வனவிலங்கு கடத்தல், மாசுபாடு, கட்டுப்பாடற்ற நகரமயமாக்கல் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவை இதற்கான முக்கிய அச்சுறுத்தல்களில் அடங்கும்.

## சந்த் குரு ரவிதாஸின் 650 ஆவது பிறந்தநாள் விழா




- சந்த் குரு ரவிதாஸின் 650 ஆவது பிறந்தநாள் விழாவானது 2026 ஆம் ஆண்டு ஜூலை 29 முதல் 2027 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 வரையில் இந்தியா முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் நினைவு கூரப்படுகிறது.
- குரு ரவிதாஸ் 15-16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பக்தி இயக்கத் துறவி, கவிஞர் மற்றும் சமூகச் சீர்திருத்தவாதியான இவர் உத்தரப் பிரதேசத்தின் வாரணாசியில் உள்ள சீர் கோவர்தன்பூரில் பிறந்ததாக பாரம்பரியமாக நம்பப்படுகிறது.
- அவர் சாதியப் பாகுபாடு மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்த அதே வேளையில் சமத்துவம், சமூக நீதி, ஒரே கடவுள் மீதான பக்தி மற்றும் உழைப்பின் கண்ணியம் ஆகியவற்றைப் போதித்தார்.
- சீக்கிய மதத்தின் புனித நூலான குரு கிரந்த் சாகிப்பில் இவரது பக்திப் பாடல்கள் இடம்

பெற்றுள்ளன.

❖ துயரம், பாகுபாடு மற்றும் அநீதியற்ற சிறந்த சமுதாயமான "பேகம்புரா" என்ற கருத்தாக்கத்துடன் இவர் தொடர்புடையவர் ஆவார்.

❖ குரு ரவிதாஸ் ஜெயந்தி ஒவ்வொரு ஆண்டும் மாக பூர்ணிமா (இந்து மாதமான மாக மாதத்தின் பௌர்ணமி நாள்) அன்று அனுசரிக்கப்படுகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★